ஜீவமார்க்கத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்; உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு. சங்கீதம் 16:11

# வேதமாணவர்களின்

# 34வது ஆவிக்குரிய மாநாடு

## நாள்: 28 & 29.12.2024

## சனி & ஞாயிறு



நம்முடைய பிதாவாகிய
தேவனாலும்
கர்த்தராகிய
இயேசுகிறிஸ்துவினாலும்
உங்களுக்குக்
கிருபையும்
சமாதானமும்
உண்டாவதாக.

# தேவ மகிமைக்கென்று ஜீவிப்பது

# LIVING TO GLORY OF GOD





# தேவனுக்கு நன்றி செலுத்தும் ஒரு வாழ்க்கை முறை

# A WAY OF LIFE THAT GIVES THANKS TO GOD

# 1 கொரிந்தியர் 6:20 (1 Corinthians)

கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.

For ye are bought with a price: therefore glorify God in your body, and in your spirit, which are God's.

# 1 கொரிந்தியர் 6:19 (1 Corinthians)

உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?

What? know ye not that your body is the temple of the Holy Ghost which is in you, which ye have of God, and ye are not your own?

# 1 கொரிந்தியர் 6:19

19 உங்களுடைய உடல் பரிசுத்த ஆவியின் ஆலயம்
என்பது உங்களுக்குத் தெரியாதா? உங்களுக்குள்
குடிகொண்டிருக்கும் அந்த ஆவியைக்
கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்டீர்கள். ஆகவே,
நீங்கள் உங்களுக்குச் சொந்தமல்ல, (RC)

# R 2099:4

- நாம் நம்முடையவர்களல்ல, ஏனெனில் கிரயத்திற்குக் கொள்ளப்பட்டோம். இனி நம் சுயசித்தத்தை நிறைவேற்றவோ, அல்லது நம்மை பிரியப்படுத்தவோ முடியாது.
- நம்மைக் கிரயத்திற்குக் கொண்டவரின் சித்தத்தைச் செய்து, அவரையே பிரியப்படுத்த வேண்டும். சுய சித்தத்தை நடப்பிக்கிறவர்கள், கிரயத்திற்குக் கொண்டவரை மறுதலிக்கிறவர்களாக இருப்பார்கள்.
- தன் சித்தத்தை வெறுத்து, அவர் சித்தத்தை நிறைவேற்றுவதே பூரண பரிசுத்த ஜீவியமாகும்.


நாம் தேவனுடைய மகிமைக்கென்று ஜீவிக்கின்றோமா ?
ARE WE LIVING FOR THE GLORY OF GOD?

# 1 கொரிந்தியர் 10:31 (1 Corinthians)

**ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.**

**Whether therefore ye eat, or drink, or whatsoever ye do, do all to the glory of God.**

# எபேசியர் 5:8 (Ephesians)

முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ, கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்.

For ye were sometimes darkness, but now are ye light in the Lord: walk as children of light:

- நம்முடைய இருதயத்திலும், நம்முடைய வாழ்க்கையிலும் பரலோகத்தின் ஒளியை, அதாவது தேவனுடைய ஒளியைப் பெற்றுள்ளவர்களைப் போல நாம் சிந்திக்கவும், நாம் பேசவும், நாம் செயல்படவும் வேண்டும்
- உலகத்தில் எரிந்து, பிரகாசிக்கிற தீபங்களாக இருப்பவர்கள், தேவனுக்கு உன்னதமான ஊழியத்தை செய்து, அவரைப் பிரியப்படுத்திட வேண்டும்.

# R3363:1

- நேர்மையான சிந்தையுடையவர்கள் உலகத்தின் ஆவியை பெறாமல், அதற்கு மாறாக தேவனுக்கு உண்மையாக ஜீவிக்கவே விரும்புவார்கள்.
- ஊழியம் செய்வதில் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள், ஒரு வித்தியாசமான ஜனமாக, ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வதை அதிகமாக விரும்பி அதற்குரிய சமயத்தை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்கள். நம்முடைய இரட்சகர் ஊழியம் கொள்ள வராமல் ஊழியம் செய்யவே வந்தார்.

- ஜீவனுள்ள எந்தவொரு சிருஷ்டியும் தேவனைப் பிரியப்படுத்தவும், அவரைக் கனப்படுத்தவும் வேண்டும் என்பதே சிருஷ்டிப்பின் தெய்வீக நோக்கமாக இருக்கின்றது.

# R2488:3

- ஒரு கிறிஸ்தவனின் முதல் கடமை, சகல காரியத்திலும் சிருஷ்டிகரை முழு மனதுடன் அங்கீகரிப்பதேயாகும்.
- தேவனுக்கு முன்பாக ஒருவன் நிலைத்திருக்க அவன் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரனாக ஜீவிக்க வேண்டும். அன்பிலே ஊழியம் செய்வதை தேவன் விரும்புகிறார்.

# 1.கிறிஸ்து நமக்குள் வாசமாயிருக்க வேண்டும்

# / As Christ Dwells Within

# 1 கொரிந்தியர் 2:16

கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது.

For who hath known the mind of the Lord, that he may instruct him? But we have the mind of Christ.

# யோவான் 6:38 (John)

என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்.

For I came down from heaven, not to do mine own will, but the will of him that sent me.

# R 5086

- "என் ஜீவியம் முழுவதும் உமது கரத்தில் இருக்கின்றது; உமக்குப் பிரியமானபடி, அதைப் பயன்படுத்திடும்'' உம்முடைய சித்தத்தின்படி ஆகட்டும் என்று கர்த்தரைப் போல சொல்ல வேண்டும்.

“தனிமையில் நான் வெளிச்சத்தில் நடப்பதைப் பார்க்கிலும், நான் இருளில் தேவனோடு நடந்திடுவேனே” R 2885

தேவனோடு தொடர்பு இல்லாத தனிமைகள், பாவத்தின் பதுங்கு குழிகளாக இருக்கிறது…

# 2 தீமோத்தேயு 3:16

வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,

All scripture is given by inspiration of God, and is profitable for doctrine, for reproof, for correction, for instruction in righteousness:

# 2 தீமோத்தேயு 3:16 (2 Timothy)

வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,

All scripture is given by inspiration of God, and is profitable for doctrine, for reproof, for correction, for instruction in righteousness:

- ஆவிக்குரிய முதிர்ச்சியின் அளவுகோல் [A Measure of Spiritual Maturity] என்பது:- தேவனுடன் தொடர்பு கொள்வதில் செலவழித்த நேரங்களின் சதவீதமாகும். அர்ப்பணிப்பின் தொடக்கத்தில், சதவீதம் குறைவாக இருக்கும். அதை எவ்வாறு அதிகரிப்பது என்பதை குறித்த பரிந்துரை இதுவே. நாளின் மூன்று வெவ்வேறு நேரங்களில் கவனம் செலுத்துங்கள்.
- (1)நீங்கள் முதலில் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கும் நாளின் ஆரம்பம்.
- (2)நீங்கள் தூங்க போகும் நாளின் முடிவு
- (3) இடையில் உள்ள மற்ற எல்லா நேரங்கள்.

ஒன்றும் இரண்டும் எளிதானது. ஆனால் மூன்றிற்கு பயிற்சி தேவை.

- நாம் எவ்வளவு அதிகமாக ஆவிக்குரிய ரீதியில் முதிர்ச்சியடைகிறோமோ, அவ்வளவு அதிகமாக அவருடைய கரம் நம் வாழ்க்கையில் செயல்படுவதை உணர முடியும். அந்த தினசரி பிரதிபலிப்பு நம் விசுவாசத்தை வேகமாக அதிகரிக்கும்.

# மத்தேயு 7:7 (Matthew)

**கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்;**

**Ask, and it shall be given you; seek, and ye shall find; knock, and it shall be opened unto you:**

# R 3807:4

- நமக்கு என்ன தேவை என்பதை முதலில் நாம் உணர வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.
- எந்த ஒரு தேவையையும் நாம் வேண்டி விரும்பிப் பெற்றுக் கொண்டால் தான் அதைப் பேணி பாதுகாப்போம்.
- நமது மிகச்சிறிய நலனும் கூட கவனிக்கப்படாமல் விடப்படுவதில்லை. R 1906:5

# 2.நன்றியுணர்வு எனும் ஏவுதல் வேண்டும் / *The Inspiration of Gratitude*

- நமது வாழ்வில் ‘‘தேவனுடைய கொடைகளும், ஆசீர்வாதங்களும் அதிகமானதாக இருந்தாலும், அதற்காக ஏறெடுக்கப்படும் நன்றிகள் மிக குறைவாகவே உள்ளது’’ ---மார்டின் லூத்தர்’’ ‘Table Talk Book’

# சங்கீதம் 103:1 (Psalm)

**என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி.**

**< A Psalm of David.> Bless the LORD, O my soul: and all that is within me, bless his holy name.**

- இங்கு ''ஸ்தோத்தரி'' என்ற வார்த்தை நன்றிகளை ஏறெடுத்து, தேவனை துதிப்பதை பொருள்படுத்துகிறதாக இருக்கிறது. மேலும் அவரை மகிமைப்படுத்தும்படி, மனத்தாழ்மையோடு, முழங்காலிட்டு தேவனை துதிப்பதையும் இது பொருள்படுத்துகிறது.



''ஸ்தோத்தரி''

நன்றிகளை ஏறெடுத்தல் /
தேவனை துதித்தல்

# சங்கீதம் 103:2 (Psalm)

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.

Bless the LORD, O my soul, and forget not all his benefits:

உண்மையில் நாம் முழங்காலிட்டு பிதாவாகிய யோகோவா தேவனை ஸ்தோத்தரிக்க கடமைப்பட்டுள்ளோம். ஏனென்றால், அவர் ஒருவர் மட்டுமே நம்முடைய எல்லா தேவைகளையும் பூர்த்தி செய்யும், தெய்வீக ஊற்றாக இருக்கிறார்.

# 1 தெசலோனிக்கேயர் 5:18 (1 Thessalonians)

எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

In every thing give thanks: for this is the will of God in Christ Jesus concerning you.

# R2004:6

- இரக்கங்களின் பிதாவுக்கு நன்றி செலுத்துவதற்கும், அவரைத் தொழுது கொள்வதற்கும், அவருடன் ஐக்கியங் கொள்வதற்குமான வாஞ்சையை யார் ஒருவர் இழக்கின்றாரோ அவர் குமாரத்துவத்தின் ஆவியையே இழந்து வருகிறார் என்பது நிச்சயம்.

# சங்கீதம் 100:3 (Psalm)

**கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்; நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்.**

**Know ye that the LORD he is God: it is he that hath made us, and not we ourselves; we are his people, and the sheep of his pasture.**

# சங்கீதம் 100:4 (Psalm)

அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.

Enter into his gates with thanksgiving, and into his courts with praise: be thankful unto him, and bless his name.



1) நமக்கு கொடுக்கப்பட்டுள்ள வாழ்க்கைக்காகவும்,
2) அதன் ஆசீர்வாதங்களுக்காகவும்,
3) அதன் வாய்ப்புகளுக்காகவும்,
4) அதன் சுதந்தரங்களுக்காகவும்,
5) கர்த்தர் மூலம் ஏறெடுக்கப்பட்ட மீட்புப் பணிக்காக
6) கர்த்தருடனான உடன் சுதந்தரத்துவத்திற்கான அழைப்புக்காக
7) பரிசுத்த ஆவியின் ஜெநிப்பித்தலுக்காகவும்,
8) தேவ வார்த்தையின் உதவி மற்றும் ஊக்கத்திற்காகவும்,
9) மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களுக்காக
10) இந்த அறிவிற்காகவும் (துல்லியமான அறிவு)

- அப்படியானால், நன்றியுணர்வுக்கு மட்டுமே இங்கே இடமுண்டு! நன்றி தெரிவிப்பதற்கான எண்ணங்களுக்கு மட்டுமே இங்கே இடமுண்டு! நாம் நமது பிறப்பை எப்படிப் பார்த்தாலும் சரி, சகலமும் நமக்கு தேவ மேற்பார்வையின் விளைவாகவே வந்திருக்கின்றன.

- அர்ப்பணிக்கப்பட்ட நம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையில் எப்போதும் தேவனுடைய கரங்களை கவனிக்க வேண்டும். நாம் எடுக்கும் ஒவ்வொரு சுவாசத்தின் போதும் தேவன் நம்முடன் இருக்கிறார் என்று விசுவாசிக்க வேண்டும்.


பெலனற்ற நேரங்களில்
என்னை தாங்கியது உம் கரமே


The more you trust God,
the more he amazes you.

# ரோமர் 8:28 (Romans)

அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த்தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்.

And we know that all things work together for good to them that love God, to them who are the called according to his purpose.

- ஆசீர்வாதமற்ற எதுவும் நமக்கு அருளப்படுவதில்லை.” R5546.
- மேலும், தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு… ‘சகலமும்’ என்பது, தாங்கள் ஓடுவதற்கென்று தங்களையே அர்ப்பணித்த இடுக்கமான வழியில் வரும் பரீட்சைகள், ஏமாற்றங்கள், சிக்கல்கள், கஷ்டங்கள் மற்றும் சோதனைகளையும் பிரதானமாக உள்ளடக்குகின்றது என்றும் அறிவார்கள்.

- மாறும் உலகில் மாறாத தேவனால் மறவாமல் நினைக்கப்படுகிறோம்!
- தேவனால் உடைக்கப்படுவதெல்லாம் நன்மைக்கே!

## ''அவர் ஒவ்வொரு கண்ணீர் துளியையும் சேகரிக்கின்றார்''

- சூழ்நிலைகள் எதுவானாலும் சரி, எந்த அச்சங்களானாலும் சரி, எந்த வலிகளானாலும் சரி,எந்த கண்ணீரானாலும் சரி,
- நமது தேவன் எல்லாவற்றையும் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்து, நமக்கு வாக்களித்தபடியே நமது நன்மைக்காகவே எல்லாவற்றையும் செய்கிறார்.
- ஆனால் ஒரு அன்புத் தந்தையைப் போல சில வேளைகளில் நமது இதயத்திலுள்ள அழுக்கை கண்களின் வழியாக அகற்ற நம்மை அழவைக்கிறார். ஆனால் மென்மையாக அந்த கண்ணீர் துளிகளை சேகரிக்கின்றார்.
- தம் கைகளில் வைத்து அவைகளை முத்துக்களாக மாற்றி பின்னொரு நாளில் நமக்குத் திரும்பக் கொடுக்கிறார்.

# 3.அன்பு செலுத்துவதே நமது கடன் / Our Debt of Love

# ரோமர் 13:8 (Romans)

ஒருவரிடத்திலொருவர் அன்புகூருகிற கடனேயல்லாமல், மற்றென்றிலும் ஒருவனுக்கும் கடன்படாதிருங்கள்; பிறனிடத்தில் அன்புகூருகிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறான்.

Owe no man any thing, but to love one another: for he that loveth another hath fulfilled the law.

# 1 யோவான் 3:16 (1 John)

அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக்கொடுக்கக் கடனாளிகளாயிருக்கிறோம்.

Hereby perceive we the love of God, because he laid down his life for us: and we ought to lay down our lives for the brethren.

# R 3150

- பல வரங்களைக் காட்டிலும் "அன்பு" மேலானது என்றும், மேலும் இந்த "அன்பு" நமக்குள் இராவிட்டால் கிறிஸ்து இயேசுவுக்குள் புது சிருஷ்டிகளாக இருக்கக்கூடிய ஆதாரத்தை இழந்து விடுவோம் என்றும் கூறுகிறார்.
- அன்பு இராவிட்டால் புது சிருஷ்டியின் அங்கத்தினராக மட்டும் அல்ல, ஒரு பூஜ்யமாக எண்ணப்படுவோம். ஏனெனில் அன்பின் ஆவியினால் மட்டுமே ஒரு புது சிருஷ்டி கருத்தரிக்கப்படுகிறது. இது எவ்வளவு அற்புதமான ஒரு பரீட்சையாய் இருக்கிறது.
- நாம் ஒவ்வொருவரும் நம்முடைய வாழ்க்கையில் இதை பொருத்தி பார்க்கலாம். நாம் தேவனுடைய பார்வையில் பூஜ்யமாக இருக்கிறோமா?

# R3150

- அதாவது எந்த விதமான நல் நடக்கையும் அன்பின் அடிப்படையில் இராவிட்டால் அதில் எந்த பயனும் இல்லையென்று பார்க்கிறோம். மேலும் ஒருவர் இரத்த சாட்சியாக மரிப்பதற்கு துணிந்தாலும் சரி, அவர்கள் எரிக்கப்பட்டாலும் சரி, அன்பின் குணங்கள் அவர்களிடத்தில் இல்லாவிடில், அவர்கள் எந்த ஆசீரும், பலனும் பெற முடியாது.

# 2 தீமோத்தேயு 1:9 (2 Timothy)

அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சியாமல், தம்முடைய தீர்மானத்தின்படியும், ஆதிகாலமுதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியும், நம்மை இரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்.

Who hath saved us, and called us with an holy calling, not according to our works, but according to his own purpose and grace, which was given us in Christ Jesus before the world began,

- அவர் நம்முடைய கிரியைகளின்படி நம்மை இரட்சிக்காமல்....
- நாம் சிறப்பு வாய்ந்தவர்கள் என்பதால், தேவன் நம்மை அழைக்காமல், அவர் நம்மை அழைப்பதால் நாம் சிறப்பு வாய்ந்தவர்கள் ஆகிறோம்.

# R5843 சகோதரரிடத்தில் இருக்க வேண்டிய சரியான மனப்பான்மை...

- கர்த்தருடைய குடும்பத்தை நாம் கவனிக்கும் போது, அதன் வெவ்வேறு அங்கங்களின் பலவீனம் மற்றும் குறைபாடுகளையே நாம் பார்க்க நேரிடுகின்றது. அவர்களிடம் காணப்படுகிற விரும்பத்தகாத பண்புகள் மீது நம்முடைய கவனம் அதிகமாக செலுத்தப்பட நாம் அனுமதிக்காமல், அவர்களுடைய அனைத்து நற்பண்புகளையும், அதிலும் விசேஷமாக அவர்களின் இருதயத்தின் உண்மையையே நினைவில் கொள்ள வேண்டும்.

# R5843 சகோதரரிடத்தில் இருக்க வேண்டிய சரியான மனப்பான்மை...

- தேவன் அவரை அழைத்திருக்கிறார் மற்றும் ஏற்றுக் கொண்டும் இருக்கிறார் என்பதை நாம் நமக்கே பரிந்துரைக்க வேண்டும். எப்போதெல்லாம் சத்தியத்திற்குள் வந்திருக்கிற ஒருவரை நாம் காண்கிறோமோ, நாம் நம்மிடமே கூற வேண்டியது, ''சரி, மாம்சத்தின் படி அவர் என்னவாக இருந்தாலும் அது முக்கியமல்ல, தேவன் அவருடைய இருதயத்தில் நன்மையான, உயர்தரமான, உண்மையான ஏதோ ஒன்றைக் கண்டுள்ளார்;

# R5843 சகோதரரிடத்தில் இருக்க வேண்டிய சரியான மனப்பான்மை...

- மேலும் தேவன் அவரை ஒரு புத்திரர் போல நடத்துவதால், அவர் சகோதரராக மேன்மையாய் கருதப்பட வேண்டும்'' என்பதே. அந்த மனுஷனுடைய சுபாவத்தின் படியான பண்புகளின் அடிப்படையில் அவரை நம்மால் மேன்மையாக எண்ணமுடியவில்லை என்றாலும், சமயம் வாய்க்கும் போது நாம் அவருக்கு நன்மை செய்கிறவர்களாய் இருப்போம்.

# R5843 சகோதரரிடத்தில் இருக்க வேண்டிய சரியான மனப்பான்மை...

- நாம் நமக்கு கூட்டாளியாக தெரிவு செய்யும் ஒருவராக அவர் இல்லாமல் இருக்கலாம்; என்றாலும், தேவன் நம்மை மேன்மையாகக் கருதுவதைக் காட்டிலும் அந்த சகோதரரை மிக மேன்மையாகக் கருதலாம். இதை உணருகையில், இது நம்மை மிகவும் மனத்தாழ்மைக் கொள்ளவும், மேலும் அந்த சகோதரரிடமிருந்து நாம் என்னென்ன உதவிகரமான பாடங்களைப் பெற முடியுமோ, அதை கற்றுக் கொள்ளவும் செய்யும்.

# R 2896

- நாம் எவ்வளவாக அறிவைப் பெற்றிருந்தாலும் அல்லது கிருபை நிறைந்தவர்களாக இருந்தாலும், இரக்கமுடைய மனதையுடையவர்களாக இராவிட்டால், தேவனுடைய பார்வையில் அங்கீகரிக்கப்பட்டவர்கள் அல்ல. நாம் மற்றவர்களுக்கு இரங்காவிட்டால் பரமபிதா நம்மேல் இரக்கம் கொள்ளார்.

# ரோமர் 12:9 (Romans)

உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக. தீமையை வெறுத்து, நன்மையைப்பற்றிக் கொண்டிருங்கள்.

**Let love be without dissimulation. Abhor that which is evil; cleave to that which is good.**

# R 4895:4

- நாம் முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவர்களாயிருக்க வேண்டுமானால் நம்முடைய மனம் அதற்குரிய நிலையில் புதிதாக்கப் படவேண்டும்.

# R2453

- ஒவ்வொரு சகோதரருக்கும் முடிவாகக் கொடுக்கப்படும் பரீட்சை சகோதர அன்பே. இது அநேகரை விழுந்துப் போகச் செய்யக் கூடியது. இதை அநேகர் நிறைவேற்றக் கூடாதவர்களாக இருந்து தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கக் கூடிய சிலாக்கியத்தைப் பெற தகுதியற்றவர்களாகப் போய்விடக்கூடும்.


How good
and pleasant it is
when God's people
live together
in unity!
Psalm 133:1
DailyVerses.net



# 4.இயேசுவைக் கிறிஸ்துவைப் பின்பற்றிட வேண்டும் /Imitating Jesus

# 1 யோவான் 2:6 (1 John)

**அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்.**


**He that saith he abideth in him ought himself also so to walk, even as he walked.**


அவர் நடந்தபடியே தானும்
நடக்க வேண்டும்
www.aanmigam.com

# 1 பேதுரு 2:21 (1 Peter)

இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்.

For even hereunto were ye called: because Christ also suffered for us, leaving us an example, that ye should follow his steps:


TO CHOOSE YOU



நல்ல வேளை, தேவன் நம்மை நம்முடைய தோல்விகளின்படி (Failures) கையாளாமல், மாறாக நம்முடைய ஆவி, நம்முடைய நோக்கங்கள், நம்முடைய வாஞ்சைகளின்படியே நம்மைக் கையாளுகிறார்...

தேவனைக் கனப்படுத்தவும், அவரைப் போலவும், தேவன் நம் கண் முன்னே வைத்த அவருடைய சாயலாகிய அவருடைய சொந்த நேசக் குமாரனைப் போலவும் இருக்க நாம் தீவிரமாக முயற்சி செய்யக்கடவோம்...


# R 3617:4:

- பெரிய பெரிய சோதனைகள் வரும்பொழுது மட்டுமல்ல சிறிய துன்பங்கள் வரும்போதும் கிறிஸ்துவின் அடிச்சுவற்றைப் பின்பற்ற மனதாயிருக்க வேண்டும்.
- பரத்துக்குரிய இந்த விசேஷ வகுப்பார், இப்படிப்பட்ட சோதனைகளினாலும் அனுபவங்களினாலும் தங்களுடைய குணநலன்களை வருங்காலத்திற்குரியதாக அபிவிருத்தியடையச் செய்வதற்காகவே தேவன் இவ்விதமாக அனுமதியளிக்கிறார்.

# R 2648

- இந்த யுகத்தின் அழைப்புக்கு கீழ்படிந்து, நம்முடைய சரீரங்கள் தேவனுக்கு பிரியமான ஜீவ பலியாக நம்முடைய ஆண்டவராம் இயேசுவின் வழியாக ஒப்புக்கொடுப்பது மட்டுமே, தேவனுடைய அன்பைப் பெறுவதற்கான ஒரே வழியாகும்.




இத்தனை பெரிய பிரபஞ்சத்தை படைத்தவர்
என் ஒருவனின் பாவத்திற்காய்
இறங்கி வந்து பலியானதை விட
அன்பின் உச்சம் வேறில்லை..!

# 5.அன்பில் பகுத்தறிவுள்ளவர்களாய் இருக்க வேண்டும் / Love Makes a Difference

- கர்த்தரை அடைக்கலமாகவும் கோட்டையாகவும் கொண்டவர்களுக்கு மனித சக்திக்கு அப்பாற்ப்பட்ட கவனிப்பும் பாதுகாப்பும் உண்டு. R 4467:4:
- மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடப்பவர்களுக்கு உடன்படிக்கையின்படி தேவதயவு நிச்சயமுண்டு. R 3658:5
- "கர்த்தர் தம்மில் அன்பு கூருகிற யாவரையும் காப்பாற்றுவார்."

- எவ்வாறு இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுபவர்களோடு ஐக்கியம் வைப்பது நமது கடமையோ அதுபோல, தகுதியற்றவர்களிடம் ஐக்கியம் கொள்ளாமல் தடுத்தி நிறுத்திக் கொள்வதும் நமது கடமையாகும் (Duty).
- தேவனுடைய தெய்வீக திட்டத்திற்கு இசைவில்லாத எதையும் நாம் செய்யக்கூடாது. அவ்வாறு செய்வது அன்பே கிடையாது, மாறாக அது நமது தரப்பிலான அறியாமையாகும். அறியாமைக்கான தேவனுடைய தீர்வு அறிவில் வளருவது ஆகும்.

# 1 தெசலோனிக்கேயர் 5:14 (1 Thessalonians)

மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்.

Now we exhort you, brethren, warn them that are unruly, comfort the feebleminded, support the weak, be patient toward all men.

- ஒழுங்கில்லாதவர்கள் என்பவர்கள், தங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொள்பவர்களும், சபை வேண்டிக் கொள்ளாத போதிலும் எதிலும் தலையிடுபவர்களுமானவர்கள். R3136:2
- ஒழுங்கில்லாதவர்களைப் பலவீனர்களென்று தவறாய் எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேற்றிக் கொண்டிராதேயுங்கள். மாறாக, பொறுமையுடனும், அன்புடனும் அவர்களுக்குப் புத்திசொல்லுங்கள். R1893:6.
- அவர்களின் தவறான வழியில் அவர்களுக்கு ஆறுதலும், ஆதரவும், ஊக்கமும் கொடுக்கக்கூடாது. R1575:2

- **திடனற்றவர்கள்:** இயல்பாகவே மந்தமானவர்களாகவும், தன்னம்பிக்கை இல்லாதவர்களாகவும், தன்னைப் பற்றி மதிப்பாய் எண்ணுதலிலும், போராடும் தன்மையிலும் குறைவுப்பட்டவர்களாகவும் இருப்பவர்கள். R3136:2. இப்படிப்பட்டவர்கள் சத்தியத்தின் மூலம் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

- ஆவிக்குரிய ரீதியில் பலவீனர்; இவர்கள் ''பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்'' (2 கொரி. 12:9) என்பது போன்ற வாக்குத்தத்தங்களால் தாங்கப்பட வேண்டும்.
- விசுவாசத்தில் பலவீனர், --வளர்ச்சியடையாதவர்கள். பலவீனருக்கு உதவ வேண்டும் / பலவீனமானவர்கள் தாங்கப்பட வேண்டும். R4418:5.

# R3092:4.

- சகோதரத்துவ ரீதியிலான புத்திமதியானது, கடுமையாகவும், கண்டனம் செய்வதாகவும் இருக்காது. மாறாக மென்மையாகவும், சாந்தமாகவும், பொறுமையாகவும் புத்திசொல்லும்.
- மேலும் தவறுகள் சீர்பண்ணப்படுவதைக் காணவே முயற்சி செய்யும், இல்லாத தீமையை தானாக கற்பனை பண்ணிக் கொள்ளாது என்று பார்க்கிறோம்.

# R 3136:3

- தேவனுடைய ஜனங்கள் எப்பொழுதும் இணக்கம் உள்ளவர்களாயும் பலவீனமுள்ளவர்களிடத்தில் மட்டுமல்ல, சகலரிடமும் சாந்த குணமுள்ளவர்களாயும், மன்னிக்கிறவர்களாயும் இருக்க வேண்டும்.

# 6. அன்பு தீங்கு நினையாது / Love Thinks No Evil

# 1 கொரிந்தியர் 13:5

**அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது,**

**Doth not behave itself unseemly, seeketh not her own, is not easily provoked, thinketh no evil;**

# R 4918:5

- மற்றவர்களை சந்தேகிக்கிற , தீமைகளை எண்ணுகிற, மற்றவர்களிடம் குற்றம் காண்கிற குணங்களே இல்லாத, அன்பின் ஆவி உடையவனாக நான் இருக்கிறேனா?
- மற்றவர்களுடைய உயர்ந்த குணலட்சணங்களை எப்போதும் பாராட்டுகிற பண்பு, மற்றவர்களுடைய பலவீனத்தில் ஏற்படுகிற சிறு சிறு தவறுகளைத் தாராளமாக மன்னிக்கிற பண்பு, இருதயத்தின் யோசனைகளை ஒழுங்குப்படுத்தும் பண்பு என்னிடத்தில் உள்ளதா?

# R 4918:5

- நல்ல நோக்கமே பூரண அன்பு. சந்தேக ஆதாரங்களையோ, விரோத எண்ணங்களையோ, அற்ப விஷயத்தையோ பெரிதுபடுத்துகின்ற நோக்கம் அன்புக்கு ஒருபோதும் கிடையாது.
- "அன்பு மெலிதாக இருக்கும் இடங்களில், தவறுகள் தடிமனாக இருக்கும்" இதை எண்ணிப்பார்த்தல் நலம்.


அன்பு
தீங்கு
நினையாது.
1கொரிந்தியர் 13:5

# R 2204

- பரிபூரண அன்பு கபடற்றது –“தீங்கு நினையாது.” சின்ன சின்ன காரியங்களிலிருந்து, தீமையான எண்ணங்களுக்காக, சூழ்நிலையான சங்கிலி தொடரான ஆதாரங்களை அது உருவாக்காது.
- அன்பு இருதயத்தின் உள் நோக்கங்களைக் குறைகூறுவதற்கு பதிலாக, நியாயத்தீர்ப்பில் பிழைகள் திருத்தப்படுவதற்கு சாத்தியாமான அனைத்து உதவிகளையும் செய்கிறது. R2204.
- அன்பு திரளான பாவங்களை மூடும்.

# R 5266

- தேவனுடன் இணக்கமில்லாத எதுவும் நல்லதாக இருக்க முடியாதது போல, அன்புடன் இணக்கமில்லாத எதுவும் நல்லதாக இருக்க முடியாது.

வைராக்கியங்கள்

விரோதங்கள் கோபங்கள்

பகைகள் சண்டைகள்

பில்லிசூனியம் பிரிவினைகள்

விக்கிரகாராதனை மார்க்கபேதங்கள்

காமவிகாரம் பொறாமைகள்

அசுத்தம் கொலைகள்

வேசித்தனம் வெறிகள்



மாம்சத்தின் கிரியைகள்

கலாத்தியர் 5 : 19-21

விபசாரம் களியாட்டுகள்


அன்பு
சந்தோஷம்
சமாதானம்
நீடிய பொறுமை
தயவு
இச்சையடக்கம்
நற்குணம்
சாந்தம்
விசுவாசம்
ஆ
வி
யி
ன்
கனிகள்
கலா 5:22-23

- கசப்பு, தவறான புரிதல் மற்றும் சகிப்பில்லாமை போன்றவை பல்வேறு வடிவங்களில் இருக்கும் ஆவிக்குரிய புளிப்புகளாகும், இவைகளை நம்முடைய வாழ்க்கையிலிருந்து தூக்கிப்போட வேண்டும்.

# R 4917:6

- தேவ ஆவியில்லாமல் தேவனுக்குரியவைகளை எந்த மனிதனாலும் தெரிந்துக் கொள்ள முடியாது. ஒருவன் அவனைக் கொண்டு வந்த அறிவை இழப்பதற்கு முன்னதாக ஆவியை இழக்கக் கூடும். ஒருவரின் குணலட்சணங்களை அளக்கக்கூடிய அளவுகோல் அன்பேயாகும்.
- தேவனால் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கும் அவரிடத்தில் நெருங்குவதற்கும் பிரதான சோதனை இந்த தீங்கு நினையாத அன்பேயாகும்.

# 7.கடுமையான நாட்கள் /கடைசி நாட்கள்/ *Last Days*

# 2 தீமோத்தேயு 3:1

**மேலும், கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக.**

**This know also, that in the last days perilous times shall come.**

2 தீமோ 3:1–5

தற்பிரியராயும்
பணப்பிரியராயும்
வீம்புக்காரராயும்
அகந்தையுள்ளவராயும்
தூஷிக்கிறவர்களாயும்
கீழ்ப்படியாதவர்களாயும்
நன்றியறியாதவர்களாயும்
பரிசுத்தமில்லாதவர்களாயும்
சுபாவ அன்பில்லாதவர்களாயும்
இணங்காதவர்களாயும்
அவதூறு செய்கிறவர்களாயும்
இச்சையடக்கமில்லாதவர்களாயும்
கொடுமையுள்ளவர்களாயும்
பகைக்கிறவர்களாயும்
துரோகிகளாயும்
துணிகரமுள்ளவர்களாயும்
இறுமாப்புள்ளவர்களாயும்
சுகபோகப்பிரியராயும்
மறுதலிக்கிறவர்களாயும்



கடைசி
நாட்களில்
மனிதர்கள்

விட்டு
விலகு

# லூக்கா 21:28

இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள் என்றார்.

And when these things begin to come to pass, then look up, and lift up your heads; for your redemption draweth nigh.

# எபிரெயர் 10:25

சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும்.

**Not forsaking the assembling of ourselves together, as the manner of some is; but exhorting one another: and so much the more, as ye see the day approaching.**

# R 4260:5

- தாவீது உடன்படிக்கை பெட்டியை நெருங்கி, கர்த்தரை அணுகி இருந்தது போல, நாமும் மணவாளனுக்கு உரியவர்களாக மணவாளனால் நேசிக்கப்பட்டவர்களாக, கிறிஸ்து இயேசு என்னும் கிருபாசனத்தை விட்டு விலகாமல் அணுகியிருப்போமாக….

1.கிறிஸ்து நமக்குள் வாசமாயிருக்க வேண்டும்.

2.நன்றியுணர்வு எனும் ஏவுதல் வேண்டும்.

3.அன்பு செலுத்துவதே நமது கடன்.

4.இயேசு கிறிஸ்துவை பின்பற்றிட வேண்டும்.

5.அன்பில் பகுத்தறிவுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

6.அன்பு தீங்கு நினையாது.

7.கடுமையான நாட்கள் /கடைசி நாட்கள்

❖ தெய்வீக குணலட்சணத்தில் வளர்ந்து பெருகுவதும்,

❖ கர்த்தருடன் நெருங்கி ஜீவிப்பதுமே இந்த அர்ப்பணிப்பின் வாழ்க்கையின் முக்கிய நோக்கமாகும்.

❖ அதுவே தேவ மகிமைகென்று ஜீவிப்பதாகும்.

- → நாம் விழுந்து போகாமல் காத்தவர் நம் தேவன் தான்.
- →மற்றொரு வருடத்திற்குள் பிரவேசிக்கச் செய்திருக்கின்றவர் நம் தேவன் தான்.
- →அவருடைய ஊழியத்தை செய்து முடிப்பதற்குக் கிருபை செய்திருக்கின்றவர் நம் தேவன் தான்.
- →சாத்தானுடைய கொடிய வஞ்சகத்திலிருந்து தேவ வசனத்தினாலே நம்மை காப்பாற்றியிருக்கின்றவர் நம் தேவன் தான்.

அப்போது நீர் செய்ததை நான் கண்டு,
உம்மை அன்புகூருவேன், ஆம் அன்புகூருவதே பொருத்தமாக இருக்கும்.

அநுதினமும் நீர் என்னை நடத்தி வந்த அந்தப் பாதையை
திரும்பிப் பார்த்து, இன்னுமதிகமாக, இன்னுமதிகமாக,
இன்னுமதிகமாக உம்மை துதித்திடுவேன்...

# 1 கொரிந்தியர் 6:20 (1 Corinthians)

கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.

For ye are bought with a price: therefore glorify God in your body, and in your spirit, which are God's.

AND GIVE
All The
GLORY
To GOD


Amen